दक्षिण रेलवे/Southern Railway
प्रधान कार्यालय/Headquarters Office
राजभाषा अनुभाग/Rajbhasha Section

भाषा संगम

साहित्य - 1 संगम - 1



செப்பு மொழி பதினெட்டுடையாள்
எனினும் சிந்தனை ஒன்றுடையாள்

भाषाएं अनेक - भाव एक

பாரதியார் भारतियार
&
निराला நிராலா

27.11.2023

सहायक साहित्य

HELP LITERATURE - 89

राजभाषा उत्सव के समापन समारोह में विमोचित

सुब्रह्मण्य भारती

सुब्रह्मण्य भारती (तमिल: *சுப்பிரமணிய பாரதி*, 11 दिसम्बर 1882 - 11 सितम्बर 1921) तमिल कवि थे। उनको **'महाकवि भारतियार'** के नाम से भी जाना जाता है। आप एक कवि होने के साथ-साथ **भारतीय** स्वतंत्रता संग्राम में शामिल सेनानी, समाज सुधारक, पत्रकार तथा उत्तर भारत व दक्षिण भारत के बीच सेतु थे।

जीवन

तमिलनाडु सरकार ने एट्टयपुरम स्थित भारती जी के पैतृक गृह का नवीकरण करके जनता के दर्शन के लिए समर्पित किया है।

भारती जी का जन्म भारत के दक्षिणी प्रान्त तमिलनाडु के एक गांव एट्टयपुरम में एक तमिल ब्राह्मण परिवार में हुआ था। उनकी प्रारम्भिक शिक्षा स्थानीय विद्यालय में ही हुई। मेधावी छात्र होने के नाते वहां के राजा ने उन्हें '*भारती*' की उपाधि दी। जब वे किशोरावस्था में थे तभी उनके माता-पिता का निधन हो गया। उनका विवाह सन् 1895 में चेल्लम्माल के साथ हुआ। विवाह के बाद सन् 1898 में वे उच्च शिक्षा के लिये बनारस चले गये। अगले चार वर्ष उनके जीवन में "खोज" के वर्ष थे।

राष्ट्रीय आन्दोलन से जुड़ाव

1909 में प्रकाशित 'विजया' नामक पत्रिका के मुखपृष्ठ में ही उन्होंने अंग्रेजों के विरुद्ध चित्र द्वारा यह पत्रिका पहले चेन्नै से प्रकाशित हुई और बाद में पांडिचेरी से।

बनारस में उनका अध्यात्म राष्ट्रप्रेम से ओतप्रोत हो उठा। सन् 1900 तक वे भारत के राष्ट्रीय आन्दोलन में पूरी तरह जुड़ चुके थे और उन्होंने भारत भर, कांग्रेस की सभाओं में भाग लेना आरम्भ कर दिया था। भगिनी निवेदिता, अरविन्द और वंदे मातरम के गीत ने भारती के भीतर आजादी की भावना को और पल्लवित किया। कांग्रेस के उग्रवादी-दल के करीब होने के कारण पुलिस उन्हें गिरफ्तार करना चाहती थी।

भारती 1908 में पांडिचेरी गए, जहां दस वर्ष वनवासी की तरह बिताए। इसी दौरान उन्होंने कविता और गद्य के जरिये आजादी की बात कही। 'साप्ताहिक इंडिया' द्वारा आजादी की प्राप्ति, जाति भेद को समाप्त करने और राष्ट्रीय जीवन में नारी शक्ति की पहचान के लिए वे जुटे रहे। आजादी के आन्दोलन में 20 नवम्बर 1918 को वे जेल गए।

प्रमुख रचनाएँ

'स्वदेश गीतंगल' (स्वदेश गीत; 1908) तथा 'जन्मभूमि' (1901) उनके देश भक्ति भरे काव्य माने जाते हैं, जिनमें राष्ट्रप्रेम् और ब्रिटिश साम्राज्य के प्रति ललकार के भाव हैं। आजादी की प्राप्ति और उसकी रक्षा के लिए तीन चीजों को वे मुख्य मानते थे - बच्चों के लिए विद्यालय, कल-कारखानों के लिए औजार और अखबार छापने के लिए कागज।

एक कविता में भारती ने लिखा हैः

तुम स्वयं ज्योति हो मां,

शौर्य स्वरूपिणी हो तुम मां,

दुःख और कपट की संहारिका हो मां,

तुम्हारी अनुकम्पा का प्रार्थी हूं मैं मां।

(डॉ॰ भारती की कविता 'मुक्ति का आहवान' से)

उनकी कुछ कृतियाँ निम्नलिखित हैं:

1.कुयिल पाट्टु

2.कण्णऩ् पाट्टु (श्रीकृष्ण गान)

3.सुयचरितै (सुचरितम्; आत्मकथा; 1910)

4.देसियगीतंगळ (देशभक्ति गीत)

5.भारति अरुबत्तारु

6.ज्ञाऩ्प्पाडल्कळ (तात्विक गीत)

7.तोत्तिरप्पाडल्कळ

8.विडुदलैप्पाडल्कळ

9.विनायकर नाऩ्मणिमालै

10.भारतियार की भगवत गीता

11.पतंजलि योगसूत्रम

12.नवतन्तिरक्कदैगळ

13.उत्तम वाऴ्क्कै चुतन्तिरच्चंकु

14.हिन्दू धर्मम (गांधी उपदेसंगळ)

15.चिन्ऩंचिरुकिळिये

16.ज्ञान रथम

17.भगवत गीता

18.चन्तिरिकैयिऩ् कतै

19.पांचाली शपथम

20.पुदिय आत्तिचूडी

यह भारती जी की केवल एक झलक है। आशा है कि पूर्ण जानकारी प्राप्त करना चाहेंगे। अधिक जानकारी के लिए संपर्क करें – E-Mail: hindiofficer@sr.railnet.gov.in

சூர்யகாந்த் திரிபாதி "நிராலா"

சூர்யகாந்த் திரிபாதி "நிராலா" ஒரு இந்திய கவிஞர், நாவலாசிரியர், கட்டுரையாளர் மற்றும் ஹிந்தி எழுத்தாளர். அவர் ஒரு ஓவியரும் கூட..

அவர் உத்தரப் பிரதேசத்தின் உன்னாவோவில் பிறந்தார். அவரது சிறிய வயதிலேயே அவரது தாயார் இறந்தார். புர்பா மேதினிபூரில் உள்ள மகிஷாடல் என்ற இடத்தில் நிராலா பெங்காலி மொழியில் கல்வி கற்றார். எனினும், மெட்ரிகுலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்ற பிறகு, அவர் சமஸ்கிருதம் மற்றும் ஆங்கில இலக்கியத்தை வீட்டிலேயே பயின்றார். கவி சம்மேளனம் போன்ற இலக்கிய வட்டாரங்களில் அவர் பங்கேற்றார். வங்காளி மாணவர் என்றாலும், நிராலா ஆரம்பத்திலிருந்தே சமஸ்கிருதத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டார். நிராலாவின் வாழ்க்கை, குறுகிய காலங்களைத் தவிர, துரதிர்ஷ்டங்கள் மற்றும் துயரங்களின் ஒரு நீண்ட வரிசையாகும்.

அவரது தந்தை பண்டிட் ராம்சஹயா திரிபாதி ஒரு அரசு ஊழியர். அவர் தந்தை லக்னோவிற்கும் பின்னர் உன்னாவ் மாவட்டத்தின் கதகோலா கிராமத்திற்கும் மாறினார். அங்கு நிராலா, ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் மற்றும் ரவீந்திரநாத் தாகூர் போன்ற ஆளுமைகளிடமிருந்து உத்வேகம் பெற்றார். இளம் வயதிலேயே திருமணம் ஆயிற்று. பிறகு, தனது மனைவி மனோஹரா தேவியின் வற்புறுத்தலின் பேரில் நிராலா இந்தி கற்றுக்கொண்டார். விரைவில், அவர் பெங்காலிக்கு பதிலாக இந்தியில் கவிதைகள் எழுதத் தொடங்கினார். மோசமான குழந்தைப் பருவத்திற்குப் பிறகு, நிராலா தனது மனைவியுடன் சில ஆண்டுகள் மகிழ்ச்சியுடன் இருந்தார். ஆனால் அவரது 20ம்வயதில் அவரது மனைவி இறந்த போது திரும்பவும் சோகம் குடி கொண்டது. பின்னர் அவரது மகளும் இறைவனடி சேர்ந்தார். நிராலா தனது மனைவி மற்றும் மகள் உட்பட தனது குடும்பத்தில் பாதியை 1918 ஸ்பானிஷ் காய்ச்சலில் இழந்தார். அவர் இந்த நேரத்தில் மிகுந்த ஏழ்மை நிலையை அடைந்தார். அப்பொழுது, அவர் பல வெளியீட்டாளர்களுக்கு பணிபுரிந்தார், வாசகராக பணியாற்றினார் மற்றும் வெளியீடுகளைத் திருத்தினார் .

சமூகத்தில் அநீதி மற்றும் சுரண்டலுக்கு எதிராக அவர் கடுமையாக எழுதினார். அவர் ஏறக்குறைய கலகக்காரராக கருத்தப்பட்டதால், அவ்வளவு எளிதாக தன் எண்ணங்களை பதிப்பில் கொண்டு வர முடியவில்லை. அவருக்கு கிடைத்தது எல்லாம் நிறைய ஏளனம்தான். இவை அனைத்தும் அவரது பிற்கால வாழ்க்கையில் அவரை மனச்சிதைவு நோயால் பாதிக்கப்பட செய்தது. மேலும் அவர் ராஞ்சியில் உள்ள மத்திய மனநல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். (தற்செயலாக பெங்காலி கவிஞர் காஜி நஸ்ருல் இஸ்லாம் பின்னர் பங்களாதேஷின் தேசியக் கவிஞராக அறிவிக்கப்பட்டவர், அதே மனச்சிதைவு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்). நிராலா 15 அக்டோபர் 1961 அன்று அலகாபாத்தில் இறந்தார்.

நிந்திக்கப்பட்ட நிராலா இந்தி இலக்கியத்தில் கிட்டத்தட்ட அனைவராலும் பாராட்டப்படும் மற்றும் மதிக்கப்படும் மிகச் சில நபர்களில் ஒருவர் ஆனார்.

நிராலாவின் பல கவிதைகள் மறைந்த அறிஞர் டேவிட் ரூபினால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவை தொகுப்புகளில் கிடைக்கின்றன. பூமியில் ஒரு பருவம்: நிராலாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள் (கொலம்பியா பல்கலைக்கழக பிரஸ், 1977), சரஸ்வதி திரும்புதல்: நான்கு இந்தி கவிஞர்கள் (ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக பிரஸ், 1993) மற்றும் காதல் மற்றும் போர்: ஒரு சாயாவாத் ஆந்தாலஜி (ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக பிரஸ் 2005). நிராலா : தூத்நாத் சிங் எழுதிய அவரது படைப்புகளைப்பற்றி ஒரு விமர்சன பகுப்பாய்வு முதலியன.

பூங்காவிற்கு 'நிராலா உத்யான்' என்றும், ஒரு அரங்கம்-நிராலா ப்ரேக்ஷாக்ருஹ மற்றும் உன்னாவ் மாவட்டத்தில் உள்ள 'மகாப்ரான் நிராலா டிகிரி கல்லூரி' என்ற கல்லூரி ஆகியவை அவரது பெயரில் பெயரிடப்பட்டுள்ளன. அவர் இறந்த வீடு இருந்த சாலைக்கு இப்போது **"நிராலா மார்க்"** என்று பெயரிடப்பட்டுள்ளது.

படைப்புகள்:

ராம் கி சக்தி பூஜை (राम की शक्ति पूजा) த்வனி (ध्वनि) அபரா (अपरा) சரோஜ் ஸ்மிருதி (सरोज स्मृति) பரிமல் (परिमल) பிரியதம் (प्रियतम) அனாமிகா (अनामिका, 1938) கீதிகா (गीतिका) குகுர்முத்தா (कुकुरमुत्ता, 1941) அணிமா (अणिमा) பேலா (बेला) நயே பத்தே (नये पत्ते) அர்ச்சனா (अर्चना) கீத் குஞ்ச் (गीतगुंज) ஆராதனா (आराधना) துளசிதாஸ் (तुलसीदास, 1938) ஜென்மபூமி (जन्मभूमि) ஜாகோ பிர் ஏக் பார் (जागो फिर एक बार) பிக்ஷுக் (भिक्षुक) தோட்தி பத்தர் (तोड़ती पत्थर) **நாவல்கள்** அப்சரா (अप्सरा) அல்கா (अलका) பிரபாவதி (प्रभावती) நிருபமா (निरुपमा) சமேலி (चमेली) சோட்டி கி பகட் (चोटी की पकड़) இந்துலேகா (इन्दुलेखा) காலே கார்னாமே (काले कारनामे) .

கதைகளின் தொகுப்புகள்:

சதுரி சமார் (चतुरी चमार) சுகுல் கி பீவி (सुकुल की बीवी, 1941) சாகி (साखी) லில்லி (लिली) தேவி (देवी).

கட்டுரை:

பிரபந்த்-பரிச்சயா (प्रबंध परिचय) பங்கபாஷா கா உச்சாரன் (बंगभाषा का उच्चारण) ரவீந்திர-கவிதா-கானன் (रवीन्द्र-कविता-कानन) பிரபந்த்-பத்ய (प्रबंध पद्य) பிரபந்த்-பிரதிமா (प्रबंध प्रतिमा) சாபுக் (चाबुक).

மொழிபெயர்ப்புகள்:

ஆனந்த்மட் (आनन्दमठ) விஷ-விருக்ஷ் (विष वृक्ष) கிருஷ்ணகாந்த் கா வில் (कृष्णकांत का विल) கபால குண்டலா (कपाल कुण्डला) துர்கேஷ் நந்தினி (दुर्गेश नन्दिनी) ராஜ் சிங் (राज सिंह) ராஜ் ராணி (राज रानी) தேவி சௌத்ராணி (देवी चौधरानी) யுகலாங்குலியா (युगलांगुलीय) சந்திரசேகர் (चन्द्रशेखर) ரஜினி (रजनी) ஶ்ரீ ராமகிருஷ்ணவசனாம்ருத்(श्री रामकृष्ण वचनामृत) பாரத் மே விவேகானந்தர் (भारत में विवेकानंद) ராஜ்யோக் (राजयोग). நிராலா பற்றிய சிறு குறிப்புதான் இது.

முழுமையாக அறிய விரும்பினால் hindiofficer@sr.railnet.gov.inக்கு மெயிலில் விருப்பத்தை தெரிவிக்கவும்.

மழை

திக்குக்கள் எட்டுஞ் சிதறி - தக்கத்
தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட -
தீம்தரிகிட
பக்க மலைகள் உடைந்து- வெள்ளம்
பாயுது பாயுது பாயுது - தாம்தரிகிட
தக்கத் ததிங்கிட தித்தோம் -அண்டம்
சாயுது சாயுது சாயுது- பேய்கொண்டு
தக்கை யடிக்குது காற்று - தக்கத்
தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட
தாம்தரிகிட
வெட்டி யடிக்குது மின்னல் - கடல்
வீரத்திரை கொண்டு விண்ணை
யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம்;
கூகூவென்று விண்ணைக் குடையுது
காற்று;
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங் கொட்டிக் கனைக்குது வானம்;
எட்டுத் திசையும் இடிய- மழை
எங்ஙனம் வந்ததடா, தம்பி! வீரா!

- பாரதியார்

बरसात

झूम-झूम मृदु गरज-गरज घनघोर।
राग अमर! अम्बर में भर निज रोर!
झर झर झर निर्झर-गिरि-सर में,
घर, मरु, तरु-मर्मर, सागर में,
सरित-तड़ित-गति-चकित पवन में,
मन में, विजन-गहन-कानन में,
आनन-आनन में, रव घोर-कठोर-
राग अमर! अम्बर में भर निज रोर!
अरे वर्ष के हर्ष!
बरस तू बरस-बरस रसधार!
पार ले चल तू मुझको,
वहाँ, दिखा मुझको भी निज
गर्जन-भैरव-संसार!
उथल-पुथलकर हृदय-
मचा हलचल-
चल रे चल-
मेरे पागल बादल!
धँसता दलदल
हँसता है नद खल-खल
बहता, कहता कुलकुल कलकल ।

- निराला

भारत
INDIA
50 पै.
P.
SUBRAMANIA BHARATI
सुब्रह्मण्य भारती

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நினைவு இல்லம்

भारत
INDIA
सूर्यकान्त त्रिपाठी 'निराला' 1896-1961
SURYAKANT TRIPATHI 'NIRALA'
25
1976